
அத்தை கிளாரா பிரவுன்

அதிகாரப்பூர்வ முன்னோடி



லிண்டா லோவரி

படம்: ஜானிஸ் லீ போர்ட்டர்

தமிழில்: சந்தோஷ் குமார்.சி

செயின்ட் லூயிஸ் , மிசூரி

1859

கிளாரா பிரவுன் உலர்ந்த மீன்கள் வைக்கப்பட்டிருந்த பீப்பாய்களைக் கடந்து சென்றாள்.

அவள் பருத்தி மூட்டைகளைக் கடந்து சென்றாள்.


எல்லா இடங்களிலும் , மக்கள் படகுகளிலிருந்து மூட்டைகளையும் பெட்டிகளையும் இறக்கி, அவற்றை துறைமுகத் தளங்களில் வீசிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் மிசிசிப்பி நதி வழியாக செயின்ட் லூயிஸுக்குக் கொண்டு வந்தனர்.

விரைவில் அவர்கள் தங்கள் உடைமைகளை மூடிய வண்டிகளில் ஏற்றி மேற்கு நோக்கிப் பயணிப்பார்கள்.

ராக்கி மலைகளில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கதைகள் பரவி வந்தன.

எல்லோரும் செல்வந்தர்களாக ஆக வேண்டும் என்று விரும்பினார்கள்.



கிளாரா அந்நியர்கள் கூட்டத்தை நோக்கி நடந்தாள்.

அவர்கள் கொலராடோவுக்குப் போகிறார்களா என்று அவள் கேட்டாள்.

பெரிய , பொன்னிற முடியுடைய ஒரு மனிதன் திரும்பிப் பார்த்தான்.

படகுத்துறையில் ஒரு பெண் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று அவன் கிளாராவிடம் கேட்டான் .

அதுவும் ஒரு கறுப்பினப் பெண்ணா ?

அவன் அந்தப் பெண்ணை மேலும் கீழுமாகப் பார்த்தான்.


பிறகு அவன் கிளாராவிடம், உன்னால் மிசூரியை விட்டு வெளியேற முடியாது என்று சொன்னான்.

ஏனென்றால் அவள் ஒரு அடிமை.

கிளாரா தன் கையிலிருந்த காகிதங்களைப் பெருமையுடன் அசைத்தாள்.

அவள் தலையை உயர்த்தி,
தான் இனி அடிமை அல்ல என்று கூறினாள்.

அவள் கிளாரா பிரவுன் , அவள் கையில் அவளுடைய விடுதலைப் பத்திரங்கள் இருந்தன.



எல்லோரும் கிளாராவை உற்றுப் பார்த்தார்கள்.

1859 - ல் பல அடிமைகள் விடுவிக்கப்படவில்லை.

ஆனால் கிளாராவின் கடைசி உரிமையாளர் இறந்தபோது , கிளாரா தனது சுதந்திரத்தை விலைக்கு வாங்கினாள்.

அதற்கு நிறைய பணம், நிறைய உழைப்பு வேண்டியிருந்தது.

ஆனால் , 57 வயதான கிளாரா இப்போது ஒரு சுதந்திரமான பெண்.

கொலராடோ செல்வதற்குத் தன்னிடம் இனி பணம் இல்லை என்று கிளாரா கூறினாள்.

ஆனால், அந்தப் பயணத்தில் தேவையான வேலைகளை செய்து தருவதாக தெரிவித்தாள்.

அந்த ஆண்கள் செல்வந்தர்களாக வேண்டும் என்று கனவு காண்பதில் மிகவும் மும்முரமாக இருப்பது போல் தோன்றியது.

உணவு சமைக்க, துணிகளை துவைக்க அவர்களுக்கு நேரமில்லை.

கிளாரா, தான் அவர்களுக்கு உணவு சமைத்து, துணிகளைத் துவைப்பதாகவும் கூறினாள்.

அவர்கள் முகங்களில் புன்னகை மலர்ந்தது.



பிறகு, குழுவின் பொறுப்பாளர் கிளாராவை நோக்கி நகர்ந்தார்.

" என் பெயர் கர்னல் வாட்ஸ்வொர்த் ," என்று அவர் கூறினார்.

அந்தத் தருணத்திலேயே , தானும் மேற்கு நோக்கிச் செல்லவிருப்பதை கிளாரா பிரவுன் அறிந்துகொண்டாள்.

கிளாரா தனது துணி துவைக்கும் தொட்டியையும் கொதிகலனையும் எடுத்துகொள்ள வீட்டிற்குச் சென்றாள்.

அவளுடைய உற்ற தோழியான பெக்கி ஜான்சன் அவளுக்கு உதவினாள்.

பெக்கி கிளாராவுக்காக மிகவும் உற்சாகமாக இருந்தாள்

தங்கத்தைத் தேடி மேற்கு நோக்கிச் சென்றதன் மூலம் சுரங்கத் தொழிலாளர்கள் செல்வந்தர்களாகி வந்தனர்.

கிளாராவும் அங்கே சென்று பணக்காரியாக ஆவாளா ?


திடீரென்று கிளாராவின் கண்களில் கண்ணீர் ததும்பியது.

அவள் பணக்காரியாக இருப்பது நன்றாகதான் இருக்கும்.

ஆனால், அவள் உண்மையில் வேறு ஒரு காரணத்திற்காக கொலராடோவுக்குச் சென்று கொண்டிருந்தாள்.

தன் மகள் எலிசா ஜேன் அங்கே இருப்பார் என்று அவள் நம்பினாள்.

கிளாரா, மீண்டும் ஒருமுறை தன் மகளின் அழகான முகத்தைப் பார்க்க விரும்பினாள்.



கிளாரா பலமுறை வெவ்வேறு அடிமை உரிமையாளர்களுக்கு விற்கப்பட்டாள்.

வர்ஜீனியா , கென்டக்கி , கேன்சஸ் மற்றும் மிசூரி ஆகிய இடங்களில் வசித்திருந்தாள் .

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு , கென்டக்கியின் உரிமையாளர் எலிசா ஜேனை விற்றார்.

அவளுக்குப் பத்து வயதுதான்.

கிளாரா அதன் பிறகு அவனைப் பார்க்கவே இல்லை.


1856- ல் கிளாரா விடுதலை செய்யப்பட்ட தருணத்திலேயே ,அவள் எலிசாவைத் தேடத் தொடங்கினாள்.

அவர் அனைவரிடமும் தன் மகளை எங்கேயாவது பார்த்தார்களா என்று கேட்டார்.

தன் மகளை அடையாளம் கண்டுகொள்ளும் நம்பிக்கையில்,
கடந்து செல்லும் மக்களின் முகங்களை உற்றுப் பார்த்தாள் .

ஆகவே கிளாரா மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

எலிசாவின் எஜமானர்கள் அவளை அங்கே அழைத்துச் சென்றிருக்கக்கூடும் என்று அவள் நினைத்தாள்.





பெரும்பாலான ஆண் தொழிலாளர்கள் தனியாகச் சென்று கொண்டிருந்தனர்.

சிலர் தங்கள் மனைவியரையும் உடன் அழைத்து வந்திருந்தனர். கிளாரா அனைவரையும் கவனித்துக் கொண்டாள்.

தினமும் அவள் குளிர்காய இருந்த நெருப்பில் சமைத்தாள்.

அவள் எருமை இறைச்சியை காயப்போட்டு உலர்த்துவாள்.

மக்கள் நோய்வாய்ப்பட்டபோது , கிளாரா அவர்களுக்குத் தேநீரையும் மூலிகைகளையும் கொண்டு சிகிச்சை அளித்தாள்.

இருப்பினும் , கிளாராவை எப்படி நடத்துவது என்று அந்த ஆண்களுக்குத் தெரியவில்லை.

மறுநாள் காலையில் , உரத்த கூச்சல்களுடனும் எருதுகளின் மூச்சுச் சத்தத்துடனும் வண்டிகளின் தொடர் புறப்பட்டது.

ஒவ்வொரு வண்டியிலும் ஏராளமான பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன.

சுரங்கம் தோண்டுவதற்கான கருவிகள் அதில் இருந்தன.

மாவு மற்றும் அரிசி மூட்டைகளும் , ஆப்பிள் கூடைகளும் , தேயிலைப் பெட்டிகளும் இருந்தன.



கிளாரா வண்டிகளில் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை.

அவள் தினமும் காளைகளுடனேயே நடந்து வந்தாள்.

இரவில் , அடிமைகளுக்கு விடுதலை அளிப்பதா வேண்டாமா என்று ஆண்கள் விவாதித்தார்கள்.

கிளாரா எங்கே தூங்க வேண்டும் என்று அவர்கள் விவாதித்தனர். அவள் மற்ற பெண்களுடன் வண்டிகளில் உறங்கலாமா ?அல்லது அவள் மாடுகளுடன் வெளியே தூங்க வேண்டுமா?.

கிளாராவின் தாய் ஒரு செரோக்கி இந்தியப் பழங்குடியினப் பெண் என்பது அந்த ஆண்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்களுக்கு இது தெரிந்தால், கிளாராவுக்கு நிலைமை இன்னும் மோசமாகி இருந்திருக்கும்.


கிளாரா ஒரு வண்டியின் அடியில் தரையில் உறங்குவாள் ..

அவள் 680 மைல்கள் நடந்தாள் !

1859 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் , அந்த வண்டிப் படை கொலராடோவில் உள்ள டென்வரை வந்தடைந்தது.

கிளாரா சோர்வாக இருந்தாள் , ஆனால் அவள் மிகவும் உற்சாகமாக இருந்தாள்.

இங்கே கொலராடோவில் , அவள் தனக்கென ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கவிருந்தாள்.



சென்ட்ரல் சிட்டி , கொலராடோ

1859

டென்வர் முழுவதும் தங்கச் சுரங்கம் பற்றிய வதந்திகள் பரவியிருந்தன

மக்கள் முன்பெல்லாம் 'சென்ட்ரல் சிட்டி'யை தங்க நாட்டின் இதயம் என்று அழைத்து வந்தனர்.

ஆனால் டென்வர் " 'சென்ட்ரல் சிட்டி" யில் இருந்து வெகு தொலைவில் இருந்தது .

அங்கு செல்ல, 40 மைல் தொலைவிற்கு, மலைச் சாலைகள் வழியான இரண்டு வார அபாயகரமான பயணம் தேவைப்பட்டது .

அங்கு செல்வதற்குப் பேருந்தில் செல்வது மட்டுமே ஒரே வழியாக இருந்தது.

ஆனால், கறுப்பின மக்கள் பொதுப் பேருந்துகளில் அனுமதிக்கப்படவில்லை.

ஒரு தனியார் வண்டியில் ஓட்டுனர் அமர்த்திச் செல்ல கிளாராவிடம் போதுமான பணம் இருந்தது.


ஆனால் அவள், தான் ஓட்டுநரின் பணிப்பெண் என்று நடிக்க வேண்டியிருந்தது.

அவள் அந்தப் பயணத்திற்காக ஓட்டுநருக்குப் பணம் கொடுத்திருந்தாள் என்பது யாருக்கும் தெரியாது.

அவள் சட்டத்தை மீறிக்கொண்டிருந்தாள்.அவள் சிறைக்குக் கூட சென்றிருக்கலாம்.

நல்லவேளையாக , கிளாராவும் அவளுடைய துணி துவைக்கும் தொட்டியும் பத்திரமாகச் சேர வேண்டிய இடத்தை அடைந்தன.





செயின்ட் லூயிஸின் துறைமுகங்கள் கூட்டமாகவும் இரைச்சலாகவும் இருந்தன.

ஆனால் அது கொலராடோவின் "சென்ட்ரல் சிட்டி" யை விட மிகவும் அமைதியாக இருந்தது .

சுரங்கத் தொழிலாளர்கள் துப்பாக்கிகள் வைத்திருந்தனர்.

தெரு மூலைகளில் கைச்சன்டைகள் உண்டாயின..

அலறல்களுக்கும் துப்பாக்கிச் சத்தங்களுக்கும் மத்தியில் இரவில் தூங்குவது கடினமாக இருந்தது.

தங்கத்தின் கண்டுபிடிப்பு மக்களைச் சற்று பைத்தியமாக்கியிருந்தது.

இருப்பினும் , கிளாரா அங்கு இருந்ததில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

சில நாட்களுக்குள் அவள் சொந்தமாகக் கடை திறந்தாள்.

கொலராடோவில் கிளாராவின் சலவையகம் தான் முதன்முதலில் தொடங்கப்பட்டது.

பல ஆண்டுகளாக அடிமையாக உழைத்த கிளாரா ஒரு சிறந்த சலவைத் தொழிலாளியாக மாறியிருந்தாள்.

அவள் சலவையகத்தை தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் மொய்த்தனர்.

ஒவ்வொரு சட்டைக்கும் 50 சென்ட் சம்பாதிக்கத் தொடங்கினாள் .

அந்தக் காலத்தில் அது ஒரு பெரிய தொகை.

1859- ல் , 50 சென்ட்களுக்கு ஐந்து ரொட்டித் துண்டுகளை வாங்க முடிந்தது.

கிளாரா விரைவில் தனது வருமானத்தைக் கொண்டு மேலும் பணம் சம்பாதிப்பது எப்படி என்று கற்றுக்கொண்டாள்.

டென்வர் , போல்டர் மற்றும் இடாஹோ ஸ்பிரிங்ஸ் ஆகிய இடங்களில் நிலம் வாங்கினாள்.

அவர் 'சென்ட்ரல் சிட்டியில்' ஏழு வீடுகளை வாங்கினார்.

சில வருடங்களுக்குள், அவர் 10,000 டாலர் மதிப்புள்ள நிலத்தையும் பணத்தையும் சொந்தமாக்கினார்.

இப்போது கிளாரா பிரவுன் செல்வந்தராகிவிட்டாள்.

இருப்பினும் , அவள் எலிசா ஜேன் பற்றிய செய்திக்காக ஒவ்வொரு நாளும் காத்திருந்தாள்.



சென்ட்ரல் சிட்டியில் எலிசா ஜேன் பற்றி யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

கிளாராவின் தோழி பெக்கிக்கும் எதுவும் தெரியவில்லை.

ஆனால், உலகில் உள்ள அத்தனை செல்வங்களாலும் தன் மகளை மீண்டும் காணும் மகிழ்ச்சியை கிளாராவுக்கு அளிக்க முடியவில்லை.

கிளாரா கொலராடோவில் வசித்துக்கொண்டிருந்தபோது , உள்நாட்டுப் போர் தொடங்கிவிட்டது.

தென் மாநில மக்கள் அடிமைகள் விடுவிக்கப்படுவதை விரும்பவில்லை.

வட மாநில மக்கள் அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டும் என விரும்பினர்.

இரு தரப்பு வீரர்களும் நான்கு ஆண்டுகள் போரிட்டனர்.

1865- ல் போர் முடிவடைந்தது.

அதன் பிறகு விரைவில் , அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்பட்டனர்.

கிளாரா தன் மகளை மீண்டும் தேட முடிவு செய்தாள்.



அவள் கென்டக்கிக்குச் செல்வாள்.

தன் மகள் அங்குதான் அடிமையாகப் பிறந்தநாள்.

தன் மகள் அங்கே இருப்பாள் என்று கிளாரா நம்பினாள்.



கென்டக்கி

1866

கிளாரா தனது துணிகளை மூட்டை கட்டி, கென்டக்கிக்கு திரும்ப நீண்ட பயணம் மேற்கொண்டாள்.

அங்கு இப்போது எல்லாம் மாறியிருந்தது.

உள்நாட்டுப் போர் வீடுகளையும் குடும்பங்களையும் அழித்திருந்தது.

பல பெரிய தோட்டங்கள் அழிக்கப்பட்டிருந்தன.

அடிமைகளாக இருந்தவர்களுக்கு, இனி தங்களுக்கு எங்கே வேலை கிடைக்கும் என்று தெரியவில்லை

அவர்களுக்கு வீடும் இல்லை, பணமும் இல்லை.

அவர்களில் சிலர் முகாம்களில் வசித்து , தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கிளாரா விடுதலை செய்யப்பட்ட பல அடிமைகளைச் சந்தித்தாள்.

அவர்கள் அனைவரிடமும் எலிசா ஜேன் என்ற பெண்ணைத் தெரியுமா என்று கேட்டாள். அவள் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்குப் பயணம் செய்தாள்.

அவள் ஒரு முகாமிலிருந்து மற்றொரு முகாமுக்குச் சென்றாள்.

யாருக்குமே அவள் மகளைப்பற்றி தெரிந்திருக்கவில்லை.



கிளாரா தனிமையாக, தோற்றதாக உணர்ந்தாள்.

எலிசாவைப் பற்றி எந்தச் செய்தியும் வராததால் அவள் மனம் நொந்து போனாள்.

தன் வாழ்நாள் முழுவதும் , கடினமான காலங்களில் கடவுள் தனக்கு உதவியதாக கிளாரா நம்பினாள்.

எனவே, தான் என்ன செய்ய வேண்டும் என்று அவள் கடவுளிடம் கேட்டாள்.

கிளாராவின் பிரார்த்தனைகள் ஒரு புதிய குடும்பத்தைத் தொடங்க அவளைத் தூண்டின.

அது கிளாரா மற்றும் எலிசா போன்றவர்களின் குடும்பமாக இருக்கும்.

அதில் தங்கள் பெற்றோரையோ அல்லது பிள்ளைகளையோ கண்டுபிடிக்க முடியாதவர்களும் இருப்பார்கள்.



கிளாரா தன் பணத்தை எண்ணிப் பார்த்தாள்.

அண்மையில் விடுதலையான 26 அடிமைகளைத் தன்னுடன் கொலராடோவுக்கு அழைத்துச் செல்லப் போதுமான பணம் அவளிடம் இருந்தது.

அவர்களில் சிலர் உறவினர்கள். பெரும்பாலானோர் அறிமுகம் இல்லாதவர்கள்.



கிளாராவின் தலைமையில், அவளுடைய புதிய "குடும்பம்" ஒரு வண்டித் தொடரில் மேற்கு நோக்கிப் பயணித்தது.

இந்த முறை அனைவருக்கும் பயணக் கட்டணம் செலுத்தப்பட்டு, அனைவரும் பெட்டிகளில் ஏறினர்.

யாரும் நடக்கவில்லை.

1860- ல் , டென்வர் நகரம் முழுவதிலும் வெறும் 23 கறுப்பின மக்கள் மட்டுமே இருந்தனர்.

சரியாக ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு , கிளாரா தனது 26 பேர் கொண்ட 'குடும்பத்தை' அங்கு அழைத்து வந்தார் .

விடுவிக்கப்பட்ட அந்த அடிமைகளைப் பற்றிய செய்தி செய்தித்தாள்களில் வெளியானது.

அடிமைகள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் கொலராடோவிற்கு வந்தனர் .

கிளாரா ஒவ்வொருவருக்கும் ஒரு வீட்டையோ அல்லது ஒரு துண்டு நிலத்தையோ கொடுத்தாள்.

சொந்தமாக தொழில் தொடங்குவது எப்படி என்று அவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு , அவர்கள் எலிசா ஜேன் பற்றி மற்றவர்களிடம் விசாரித்தனர்.



ஆனால் சில வருடங்களுக்குள், கிளாரா தனது பணம் முழுவதையும் இழந்தாள்.

சில திருட்டு வணிகர்களும் அவளை ஏமாற்றினார்கள்.

வெள்ளத்தில் அவள் தனது நிலத்தின் ஒரு பகுதியையும் இழந்தாள்.

இருப்பினும் , அவள் தன்னை செல்வந்தராகவே உணர்ந்தாள்.

பலர் அவருடைய பணத்தைக் கொண்டு ஒரு புதிய , சுதந்திரமான வாழ்க்கையைத் தொடங்கினர் .

ஆனால் கிளாராவுக்கு இப்போது வயதாகிக் கொண்டிருந்தது.

இப்போது அவள் தன்னைத் தானே கவனித்துக் கொள்ள பணம் தேவைப்பட்டது.

முன்னோடிகள் வயதானபோது , கொலராடோ மாநிலம் அவர்களின் பணிக்காகவும் , நிலத்தைக் குடியேறியதற்காகவும் அவர்களுக்குப் பணம் வழங்கியது

இந்தப் பணம் ஓய்வூதியம் என அழைக்கப்பட்டது.



1865- க்கு முன்பு , கொலராடோவில் குடியேறிய எவரும் அதிகாரப்பூர்வமான முன்னோடியாகக் கருதப்பட்டார்.

ஆனால் கிளாராவோ 1859- ல் அங்கு வந்திருந்தார்.

ஆனால் அவள் தனது ஓய்வூதியத்தைப் பெற முயன்றபோது , சில விசித்திரமான விதிகளைக் கண்டார்.

எந்தவொரு அதிகாரப்பூர்வ முன்னோடியும் வெள்ளையராக இருக்க வேண்டும்.

மேலும், எந்தவொரு அதிகாரப்பூர்வ முன்னோடியும் ஆணாக இருக்க வேண்டும்.

ஒரு கறுப்பினப் பெண்ணால் முன்னோடி ஓய்வூதியத்தைப் பெற முடியாது.

கிளாரா தனது கருணைக்காகப் புகழ் பெற்றிருந்தாள்.

அவள் எப்போதும் மக்களுக்கு, குறிப்பாகப் பசியால் வாடுபவர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும், தங்கள் தோல் நிறத்தின் காரணமாக மோசமாக நடத்தப்பட்டவர்களுக்கும் உதவி செய்தாள்.


எல்லோரும் அவளை 'அத்தை' கிளாரா பிரவுன் என்று அழைத்தார்கள்.

ஆனால் இந்த முறை, உதவி கேட்பது அவளுடைய முறை. கிளாரா தன் நண்பர்களிடம் பேசினாள்.

கொலராடோவில் உள்ள மற்ற சுரங்கத் தொழிலாளர்களைப் போலவே கிளாராவும் அங்கு சாதித்திருக்கிறார் என்று மக்கள் நினைத்தார்கள்.

அவர்கள் செய்தித்தாள்களுக்குக் கடிதங்கள் எழுதினார்கள்.

அவர்கள் மாநகர மன்றத்தில் கிளாராவின் பிரச்சினை குறித்து உரையாற்றினார் .



அதன் பிறகு விதிகள் மாற்றப்பட்டன.

அத்தை கிளாரா பிரவுன் கொலராடோவின் முதல் அதிகாரப்பூர்வ வெள்ளையரல்லாத முன்னோடியானார்.

அவள் தனக்குரிய தகுதியான ஓய்வூதியத்தைப் பெற்றாள்.





கவுன்சில் பிளஃப்ப்ஸ் , அயோவா

1883

கிளாராவுக்கு 80 வயதாக இருந்தபோது , அவருடைய பழைய தோழி பெக்கி ஜான்சனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

பெக்கி அயோவாவில் குடியேறி இருந்தாள்.

படிப்படியாக கிளாராவின் பார்வை மங்கத் தொடங்கியது.

பெக்கியின் கடிதத்தைப் படிப்பதற்கு அவள் கண்களை வருத்திக்கொள்ள வேண்டியிருந்தது.



பெக்கி தபால் நிலையத்தில் சந்தித்த ஒரு பெண்ணின் பெயர் எலிசா ஜேன்.

அவள் ஒரு அடிமையாக இருந்திருந்தாள்.

அவளுக்கு 10 அல்லது 11 வயதாக இருந்தபோது , அவள் தன் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டாள்.

ஒரு கணம் கிளாராவின் இதயம் நின்றுவிட்டது. அவள் தன் மகளாக இருக்க முடியுமா ?


“உடனடியாக வாருங்கள் ," என்று பெக்கி அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

ஆனால், அந்தப் பயணத்திற்கு கிளாராவிடம் போதுமான பணம் இருக்கவில்லை.

கிளாராவின் நண்பர்கள் அந்தச் செய்தியைக் கேட்டார்கள்.

அவர்கள் அவருடைய பயணத்திற்கான பணத்தைத் திரட்டுவதற்காக செய்தித்தாள் கட்டுரைகளை எழுதி, ஒரு இரவு விருந்தையும் ஏற்பாடு செய்தார்கள்.

இறுதியாக, வசந்த காலத்தின் தொடக்கத்தில் , கிளாரா அயோவாவிலுள்ள கவுன்சில் பிளஃப்ஸ் நோக்கிச் செல்லும் ரயிலில் ஏறினார்.





வழியில், 50 ஆண்டுகளுக்கு முந்தைய கென்டக்கியின் நினைவுகளில் அவள் மனம் சுழன்றது.

ஏலத்திற்காக மேடையில் இளஞ்சிவப்பு நிற உடை அணிந்து நின்றிருந்த எலிசா ஜேன் மிகவும் பயந்துபோய், கூட்டத்தின் முன்னால் வாந்தி எடுத்தாள். இதனால் அவள் உரிமையாளர் மிகவும் கோபமடைந்தார்.

ஏனென்றால், அவள் நோய்வாய்ப்பட்டவள் போல் தெரிந்தால், அவருக்கு அவளை விற்பதில் கிடைக்கும் பணம் குறையும்.

கிளாரா அந்த வெள்ளையர்கள் எல்லோரையும் தள்ளிவிட்டு மேடையை அடைய விரும்பினாள்.

அவள் தன் சின்ன மகளை மீண்டும் அள்ளி, தன் நெஞ்சோடு அணைத்துக்கொள்ள விரும்பினாள். மாறாக , எலிசா ஜேன் விற்கப்பட்டாள்.

விவசாய உபகரணங்கள் , தளபாடங்கள் மற்றும் பிற அடிமைகளுடன் ஒரு வண்டியில் ஏற்றப்பட்டாள் .

கிளாராவுக்கும் எலிசாவுக்கும் கடைசியாக ஒருமுறை அணைத்துக் கொள்ளக் கூட வாய்ப்பு கிடைக்கவில்லை.





கிளாராவின் ரயில் கவுன்சில் பிளஃப்ஸை
வந்தடைந்தது.

அங்கே கிளாரா செகண்ட் ஸ்ட்ரீட்டுக்குச்
செல்லும் டிராலியில் ஏறினாள்.

கிளாரா தனது நிறுத்தத்தை நெருங்க நெருங்க,
அவளது இதயம் வேகமாகத் துடிக்கத்
தொடங்கியது.

கிளாரா பதட்டமாக இருப்பதை மற்ற பயணிகள்
அனைவரும் காண முடிந்தது.

பயணிகள் கிளாரா சரியான நிறுத்தத்தில்
இறங்குவதை உறுதி செய்தனர்.

கிளாரா டிராலியில் இருந்து இறங்கியபோது,
பலத்த மார்ச் மாதக் காற்று வீசிக்கொண்டிருந்தது.

குளிர் காற்றின் காரணமாக அவளது கண்கள்
சுருங்கின.



தண்ணீர் தேங்கியிருந்த சாலையில் உயரமான , கருமையான ஒரு பெண் தன்னை நோக்கி ஓடி வருவதை அவள் கண்டாள்.

திடீரென்று கிளாராவுக்குப் பயமாக இருந்தது . அவளால் தன் மகளை அடையாளம் காண முடியாவிட்டால் என்ன செய்வது?

எத்தனையோ வருடங்கள் கடந்துவிட்டன!

ஓடிக்கொண்டிருந்த பெண் வேகம் குறைத்து, கிளாராவை நெருங்கி வந்தாள்.

முதலில், கிளாராவால் அவனது மூக்கையும் புன்னகையையும் மட்டுமே பார்க்க முடிந்தது.

அந்தப் பெண் கூச்சத்துடன் மேலும் ஒரு அடி எடுத்து வைத்தாள்.

கிளாரா அந்தப் பெண்ணின் கண்களை பார்க்க முடிந்தது.

கிளாரா ஒருபோதும் மறக்காத அதே இனிமையான பழுப்பு நிறக் கண்கள் அவை. அவரது இதயம் படபடக்கத் தொடங்கியது.

நூறு ஆண்டுகள் கழிந்த பிறகும், அவள் தன் சிறுமியை எங்கு பார்த்தாலும் அடையாளம் கண்டுகொள்வாள்.

கிளாரா தன் கைகளை விரித்தாள். எலிசா ஜேன் கிளாராவைக் கட்டிப்பிடித்தாள் .

கிளாரா இப்போது தன்னை உலகிலேயே மிகவும் பணக்காரியாக உணர்ந்தாள்.

அவள் மீண்டும் தன் மகள் எலிசா ஜேனைத் தன் கைகளில் ஏந்தியிருந்தாள் .

இந்த முறை , அவளை ஒருபோதும் விட்டுப்போக விடமாட்டாள்.



இறுதி வார்த்தைகள்



1885-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், 'பயனியர் அசோசியேஷன்' (Pioneer Association) அமைப்பின் ஒரே பெண் உறுப்பினரான 'ஆன்ட்' கிளாரா பிரவுனுக்காக டென்வரில் ஒரு விருந்து அளிக்கப்பட்டது. அவரை வாழ்த்த நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்; அவர்களில் ஒருகாலத்தில் அடிமைகளாக இருந்து பின்னர் தொழில்முனைவோராக மாறியவர்கள், செல்வந்தர்கள், நில உரிமையாளர்கள், பழைய நண்பர்கள் மற்றும் டென்வர் நகர மேயர் ஆகியோர் அடங்குவர்.

ஆனால், வேறொரு விஷயம்தான் அந்தத் தருணத்தை கிளாராவின் வாழ்க்கையிலேயே மிகவும் மகிழ்ச்சியானதாக மாற்றியது. தனது தாயால் கண்டறியப்பட்ட உடனேயே எலிசா ஜேன் கொலராடோவில் வந்து வசிக்கத் தொடங்கியிருந்தார். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி கிளாரா தனது 'பயனியர்' விருதைப் பெற்றுக்கொண்டபோது, அவருக்கு ஒருபுறம் எலிசா ஜேனும் மறுபுறம் கிளாராவின் பேத்தியும் நின்றிருந்தனர்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, சுமார் 83 வயதில், டென்வரில் இருந்த தனது சிறிய வெள்ளை நிற வீட்டில் 'ஆன்ட்' கிளாரா பிரவுன் காலமானார். மக்கள் அவர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்ததால், அவரது படுக்கையைச் சுற்றி நின்று பாட அவர்கள் முறை வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது; ஏனெனில், அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் அங்கு நிற்பதற்கான இடவசதி இல்லை.

முக்கியமான தேதிகள்

1802— கிளாரா வர்ஜீனியாவில் அடிமையாகப் பிறந்தார். (அவரது சரியான பிறந்த தேதி உறுதியாகத் தெரியவில்லை.)

1805— கென்டக்கியில் ஜார்ஜ் பிரவுன் என்ற ஒருவருக்கு அடிமையாக விற்கப்பட்டார் .

1820— சக அடிமையான ரிச்சர்ட் பிரவுனை மணந்தார்.

1826— மகள் எலிசா ஜேன் பிறந்தார்

1836— எலிசா ஜேன் வேறு ஒரு உரிமையாளருக்கு விற்கப்பட்டது.

1856— கிளாரா தனது சுதந்திரத்தை விலைக்கு வாங்குகிறாள்

1859— கொலராடோவிற்கு வருகை

1859-1865— நிலம் வாங்கி பெரும் செல்வம் ஈட்டினார்.

1865— எலிசா ஜேனைத் தேடி கென்டக்கிக்குச் சென்றார்

1866— விடுவிக்கப்பட்ட அடிமைகள் கொலராடோவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

1881— கென்டக்கியில் முன்னோடி ஓய்வூதியம் பெற்றார்

1883— எலிசா ஜேனுடன் மீண்டும் இணைகிறாள்

1885— அத்தை கிளாரா பிரவுனைக் கௌரவிக்கும் விதமாக டென்வரில் ஒரு விருந்து நடைபெற்றது.

1885— கொலராடோவில் அத்தை கிளாரா பிரவுன் காலமானார்.